பக்கங்கள்: 07
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 05 வியாழக்கிழமை 19.05.2022 கதிர் 88

## கோதுமை மாவின் விலை 40 ரூபாவால் அதிகரிப்பு!

கோதுமை மாவின் விலை உடன் அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்படுவதாக பிரிமா நிறுவனம் அறிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு அந்நிறுவனம் இதனைத் தெரிவித்துள்ளது.

அதன்படி, கோதுமை மா கிலோ ஒன்றின் விலையை 40 ரூபாவால் அதிகரித்துள்ளதாக பிரிமா நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

# அத்தியாவசியமற்ற அரச பணியாளர்கள் நாளை கடமைக்கு வரத் தேவையில்லை!

## பிரதமர் ரணில் அதிரடி அறிவிப்பு; எரிபொருள் தட்டுப்பாடு காரணமாம்



அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் அரச ஊழியர்களைத் தவிர, ஏனைய அரச ஊழியர்கள் நாளை பணிக்கு வரத் தேவையில்லை எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தற்போதைய கடுமையான எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் போக்குவரத்து சிரமங்களைக் கருத்தில்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், அத்தியாவசியமற்ற பயணங்களை நாளை தவிர்த்துக்கொள்ளுமாறு மக்களிடமும் பிரதமர் வேண்டுகோள் விடுத்தார்.

☞2

## நாடகங்கள் ஆடாமல் ‘13’ஐப் பாதுகாக்கவும்

### சபையில் சஜித் இடித்துரைப்பு



சர்வதேசத்தைத் திருப்திப்படுத்த 13 பிளஸ் எனவும், உள்நாட்டில் அரசில் இருப்பைத் தக்க வைக்க 13 மைனஸ் எனவும் கூறி அரசியல் நாடகங்களை அரங்கேற்றாமல், 13 ஆவது திருத்தச் சட்டம் ஊடாக வழங்கப்பட்ட அரசியல் தீர்வைப் பாதுகாக்க நடவடிக்கை

☞2

## 30 ரூபாவால் அதிகரித்தது பாண் விலை



இன்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் 450 கிராம் நிறை கொண்ட பாணின் விலை 30 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது.

அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்க தலைவர் என். கே. ஜயவர்தன இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், ஏனைய வெதுப்பக உற்பத்திகளின் விலைகளும் 10 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலையைப் பிரிமா நிறுவனம் 40 ரூபாவாலும், செரண்டிப்நிறுவனம் 35 ரூபாவாலும் அதிகரித்துள்ளன.

## வடக்கில் 4ஆம் தடவை கொரோனாத் தடுப்பூசி



60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், 20 வயதுக்கு மேற்பட்ட நோய் எதிர்ப்பு பிரச்சினை உள்ளவர்களுக்கும் நான்காவது தடவை பைஸர் மேலதிக தடுப்பூசி வழங்கல் திட்டம் வடக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய

☞2

## நாடாளுமன்ற புதிய தவிசாளர் குழாமில் சாணக்கியன் எம்.பி.



நாடாளுமன்றத்தில் இன்று புதிய தவிசாளர் குழாம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனும் இடம் பிடித்துள்ளார்.

புதிய தவிசாளர் குழாமின் பெயர்கள் வருமாறு:-

1. சாந்த பண்டார
2. எம். வேலுகுமார்
3. மயந்த திஸாநாயக்க
4. ஹர்ன ராஜகருண

☞2

## பெண் தொழிலாளர்கள் குளவி கொட்டி பாதிப்பு

லுணுகலைப் பகுதியின் அடாவத்தைப் பெருந்தோட்டப் பிரிவைச் சேர்ந்த நான்கு பெண் தொழிலாளர்கள், குளவிக் கொட்டுக்கு இலக்காகி

☞2

## செஹான் சேமசிங்கவின் வீட்டில் 60 பவுண் தங்க நகைகள் மாயம்!



இம்மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தின்போது, ஆளுங்கட்சியின் அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான செஹான் சேமசிங்கவின் வீட்டில் இருந்து 60 பவுண் தங்க நகைகள் காணாமல்போயுள்ளன.

இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான துமிந்த திஸாநாயக்கவின் வீட்டில் இருந்த 9 மில்லிமீற்றர்

☞2

## சமரவிக்கிரம எம்.பியாக இன்று பதவிப்பிரமாணம்



பொலன்னறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக ஜகத் சமரவிக்கிரம, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் இன்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

☞2

## கண்டி மாநகர சபை ‘மொட்டு’ உறுப்பினரின் இல்லத்தில் 35 பவுண் தங்க நகைகள் மாயம்

கண்டி மாநகர சபையின் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி உறுப்பினர் சங்கீத் சில்வாவின் வீட்டுக்குத் தீயிடப்பட்டதில் சுமார் 34 பவுண் எடை கொண்ட தங்க நகைகள் காணாமல்போயுள்ளன என்று அவரின் மனைவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கண்டியில் அமைக்கப்பட்டிருந்த ‘கோட்டா கோ கம’ கிளை கடந்த 9ஆம் திகதி தாக்கப்பட்டது. இதையடுத்து கண்டி போகம்பறைப் பிரதேசத்திலுள்ள கண்டி மாநகர சபை உறுப்பினர் சங்கீத் சில்வாவின் வீடும் தாக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தையடுத்து மேற்படி வீட்டிலிருந்த 34 பவுண் எடை கொண்ட தங்க நகைகள் மற்றும் 8 இலட்சம் ரூபா ரொக்கப் பணம் உட்பட

☞2

## வடக்கில் 4 ஆம் தடவை ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தடுப்பூசி செலுத்துதல் தொடர்பாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும் அந்த செய்திக்குறிப்பில் ,

கொரோனாத் தடுப்பூசி வழங்கல் திட்டத்தின் கீழ் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 20 வயதுக்கு மேற்பட்ட நோய் எதிர்ப்புப்பிரச்சினை உள்ளவர்களுக்கும் மேலதிகமாக நான்காவது தடவையாக கொரோனாத் தடுப்பூசியானது (பைஸர்) இவ்வாரம் முதல் வழங்கப்படவுள்ளது.

மேற்கூறப்பட்டவர்களில் ஏற்கனவே கொரோனாத் தடுப்பூசியை மூன்று தடவைகள் பெற்றுக்கொண்டு மூன்று மாதம் நிறைவுற்றவர்கள் மட்டுமே இந்தத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளலாம்

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இந்தத் தடுப்பூசியானது அந்தந்தப் பிரதேசங்களுக்குரிய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வழங்கப்படும்.

கொரோனாத் தடுப்புக்கான மூன்று தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்ட 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் தமது தடுப்பூசி அட்டையைச் சமர்ப்பித்து தமக்குரிய நான்காவது தடுப்பூசியை (பைஸர்) பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் சுகாதார அமைச்சானது நாடு முழுவதும் உள்ள 20 வயதுக்கு மேற்பட்ட நோய் எதிர்ப்புப் பிரச்சினை உள்ள வர்களுக்கும் இத் தடுப்பூசியை நான்காவது தடவையாக வழங்க முடிவு செய்துள்ளது.

எனவே, வடக்கு மாகாணத்தில், யாழ். மாவட்டத்தில் யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் பருத்தித்துறை, ஊர்காவற்துறை, தெல்லிப்பளை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைகளிலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள மாவட்ட பொது வைத்தியசாலைகளிலும் மேற்கூறப்பட்ட 20 வயதுக்கு மேற்பட்ட நோய் எதிர்ப்புப் பிரச்சினை உள்ளவர்களுக்கும் இத்தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன.

20 வயதுக்கு மேற்பட்டவர்களில் பின்வரும் நோய் நிலைமையுள்ளவர்களுக்கு இத்தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

1. நோய்எதிர்ப்புக்குறைபாட்டுநிலைமை நோயினாலோ அல்லது நோய்க்குரிய சிகிச்சையினாலோ ஏற்பட்டவர்கள்.

2. நாட்பட்ட சிறுநீரக தொகுதியுடன் தொடர்புடைய நோய்நிலைமைகள்.

3. திண்ம அங்கங்கள் (சிறுநீரகம், ஈரல், சுவாசப்பை போன்றவை) மற்றும் என்புமச்சை அல்லது ஸ்டெம் செ மாற்று அறுவைச் சிகிச்சைக்குட்பட்டவர்கள்.

4. புற்றுநோய் உடையவர்களில் அதற்கான சிகிச்சை பெறுபவர்கள் மற்றும் அதற்குரிய சிகிச்சையை நிறைவு செய்தவர்கள்.

5. மண்ணீரல் இல்லாதவர்கள் மற்றும் மண்ணீரல் தொழிற்பாட்டு பிரச்சினை உடையவர்கள்.

6. வேறு ஏதாவது நோய் நிலைமைகளால் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்த நிலையில் உள்ளவர்கள் எனச் சிகிச்சை அளிக்கும் பொது வைத்திய நிபுணரால் தடுப்பூசிக்காக பரிந்துரைக்கப்படுபவர்கள்.

மேற்கூறப்பட்டவர்களில் ஏற்கனவே கொரோனாத் தடுப்பூசியை மூன்று தடவைகள் பெற்றுக்கொண்டு மூன்று மாதம் நிறைவுற்றவர்கள் மட்டுமே இத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளலாம்.

இக்குறிப்பிட்ட நிலைமையுடைய 20 வயதுக்குமேற்பட்டவர்கள்தங்களுடைய மருத்துவ அறிக்கைகளையும் தடுப்பூசி பெற்றுக்கொண்ட அட்டையையும் தமது பிரதேசத்துக்கு அருகிலுள்ள மேற்கூறப்பட்ட வைத்தியசாலைகள் ஏதேனும் ஒன்றில் சமர்ப்பித்து தமக்குரிய தடுப்பூசியை இவ்வாரம் முதல் பாதுகாப்பாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் இவ்வாறான விசேட நோய் நிலைமையுடைய 20 வயதுக்கு மேற்பட்டவர்கள் தொடர்பாக அறிந்த சுகாதாரப் பணியாளர்கள், அரச உத்தியோகத்தர்கள், சமூக ஆர்வலர்கள் அவர்கள் தொடர்பான விவரங்களை உங்கள் பிரதேச சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கு அறியத்தருமாறும், இத்தகவலை அவர்களுடைய பராமரிப்பாளர்களுக்கு தெரிவிக்கும்படியும், இந்நோயாளர்களை தடுப்பூசி வழங்கும் வைத்தியசாலைகளுக்கு அனுப்ப ஊக்குவிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது.

## நாடாளுமன்ற புதிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

5. ரோஹினி குமாரி விஜயரத்ன
6. ஹேஷா விதானகே
7. கோகிலா குணவர்தன
8. பிரேம்நாத் தொலவத்த
9. வசந்தயாப்பா பண்டார
10. இரா. சாணக்கியன்
11. வீரசுமன வீரசிங்க
12. சுரேன் ராகவன்
13. ஹரினி அமரசூரிய

## பெண் தொழிலாளர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆபத்தான நிலையில் லுணுகலை அரசினர்மருத்துவமனையில்சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச்சம்பவம் இன்று அடாவத்தைப் பெருந்தோட்டப் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

அடாவத்தைப் பெருந்தோட்டப் பிரிவில் தேயிலைத் தளிர்களைக் கொய்யும் கடமையில் பெண்தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்த வேளையிலேயே, மரமொன்றிலிருந்த குளவிக்கூடு கலைந்து, பெண் தொழிலாளர்களைக் கொட்டத் தொடங்கின.

இந்தச் சம்பவத்தில் பலர் குளவிக் கொட்டுக்கு இலக்கான போதிலும், ஆபத்தான நிலையிலுள்ள நான்கு பெண் தொழிலாளர்களே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மருத்துவமனையில் சேர்க்கப்படாத பலர் ஆரம்ப சிகிச்சைகளைப் பெற்று வீடு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## செஹான் சேமசிங்கவின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரக கைத்துப்பாக்கி ஒன்றும் காணாமல் போயுள்ளது.

அனுமதிபெற்றகுறித்தகைத்துப்பாக்கி காணாமல்போயுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினரின் சகோதரரால், அநுராதபுரம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## சமரவிக்கிரம எம்.பியாக ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடாளுமன்றம் இன்று முற்பகல் 10 மணிக்கு கூடியபோதே அவர் உறுதியுரை ஏற்றார்.

ஸ்ரீலங்காபொதுஜனமுன்னணியின் பொலன்னறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவின் மறைவை அடுத்து, ஏற்பட்ட வெற்றிடத்துக்கு ஜகத் சமரவிக்கிரம நியமிக்கப்பட்டுள்ளார்.

'மொட்டு'க் கட்சியின் விருப்பு வாக்குப் பட்டியலில் அமரகீர்த்திக்கு, அடுத்த இடத்தை இவர் பிடித்திருந்தார்.

## கண்டி மாநகர சபை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்னும் பெறுமதியான பல பொருள்கள் காணாமல்போயுள்ளன என்று அவரது மனைவி கே.ஜீ ரேனுகா தர்மவங்ச, கண்டி பொலிஸில் முறைப்பாடுசெய்துள்ளார்.

## நாடகங்கள் ஆடாமல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எடுக்கப்பட வேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், இது தொடர்பில் மேலும் கூறியதாவது:-

முப்பது வருடகால போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு பெரும் பங்காற்றிய படையினரை இந்நாளில் நினைவுகூருகின்றேன். அதேபோல் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் கருத்துகளையும் பெறப்பட்டு உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். 13 பிளஸ் எனவும், 13 மைனஸ் எனவும் அரசியல் நாடகமாடாமல், 13 ஆவது திருத்தச்சட்டம் ஊடாக வழங்கப் பட்ட தீர்வைப் பாதுகாக்க வேண்டும்.

மே 09 ஆம் திகதி நடைபெற்ற சம்பவங்களை நாம் கண்டிக்கின்றோம். வன்முறையுடன் தொடர்புடைய அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். மே 06 ஆம் திகதி அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. அப்படி இருந்தும் இப்படியான சம்பவம் இடம்பெறுவதற்கு அடிப்படைக் காரணியாக அமைந்த விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட வேண்டும்.

அலரிமாளிகையில் இருந்துதான் வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டது. அமைதியாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தியதால்தான் கொந்தளிப்பு நிலை ஏற்பட்டது. அரச பயங்கரவாதமும் கட்டவிழ்த்துவிடப்பட்டது.

வன்முறையால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் கவலையை வெளிப்படுத்திக் கொள்கின்றோம். மே 09 மற்றும் அதற்கு பின்னர் நடைபெற்ற சம்பவங்களை நாம் அனுமதிக்கப் போவதில்லை. சிலர் இனவாதத்தைத் தூண்டுவதற்குகேகூட முற்பட்டனர். பொறுப்புக்கூற வேண்டியவர்கள், தகுதி தராதரம் பாராது சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் - என்றார்.

## அத்தியாவசியமற்ற .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றுகையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அன்றாடம் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்காகச் செலவு செய்வதற்குத் திறைசேரியில் நிதி இல்லை எனவும், இது தொடர்பான விரிவான அறிக்கை அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அன்றாட நுகர்வுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்குரிய செலவினங்களுக்காக உடனடியாக நிதியைத் தேட வேண்டியுள்ளது. இந்த விடயம் இலங்கையை மாத்திரம் பாதிக்கும் பிரச்சினையல்ல.

உணவு நெருக்கடி உலகளாவிய நெருக்கடியாக மாறுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. அதனை முன்னதாகவே அறிந்து, அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க உலக வங்கி 30 பில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளது - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மீளாது இந்த நாடு

இந்த நாடு திருந்தாது – உருப்படாது – என்றே தோன்றுகின்றது. கற்றுக்கொண்ட பாடங்களில் இருந்து – பட்டறிவிலிருந்து முன் நோக்கி நகரவும், தவறுகளைத் திருத்திக் கொள்ளவும், தன்னைப் புத்தாக்கப்படுத்தவும் நாடு தயாரில்லை என்றால் அதற்கு மீட்சியே இல்லை என்றுதான் அர்த்தம். இனவாத யுத்தமும், அதற்குக் கொட்டித்தீர்த்த பண மும், அந்த யுத்தம் சீரழித்த தேச கட்டுமானங்களும் தான் இந்த இழிநிலைக்குக் காரணம் என்பது வெள்ளி டைமலை. அதில் யாருக்கும் சந்தேகம் இல்லை.

யுத்தப் பேரழிவை ஒப்பேற்றி முடிப்பதற்காக இந்த நாட்டு அரசுகள் வாங்கி குவித்த இராணுவத் தளவாடங் களுக்கான கடனும், வட்டியும் சேர்ந்துதான் இப்போது நாட்டைக் கழுத்தை நெரிப்பது போல இறுக்கி வைத்தி ருக்கின்றன.

அந்த யுத்தத்தை நடத்துவதற்காக அதன் கணக் கில் கடன்களை வாங்கிக் குவித்துக் கடப்பாடுகளைப் பெருக்கியமை மட்டுமல்ல, படைப் பலப் பெருக்கம் என்ற பெயரில் நாட்டின் இயலுமைக்கு அதிகமான படைகளைக் குவித்தும், இராணுவ வெற்றி என்ற வெறியில் முனைப் பாக இருந்தன பௌத்த, சிங்களப் பேரினவாத அரசுகள்.

அதற்காகப் பல்லாயிரம் துருப்புகளை கணக்கு வழக்கின்றி படைகளில் சேர்த்தனர். அதனால் நாடு தன்னுடைய இயலுமைக்கு அப்பால் ஊதிப் பெருத்த ஒரு முப்படைப் பட்டாளத்தை கொண்டிழுக்க முடியாமல், பொருளாதார ரீதியில் மூச்சுத் தடுமாறித் தள்ளாடி, அல்லாடுகின்றது.

கணக்கு வழக்கின்றி, செயற்கைத் தனமாகத் துருப்புகளை குவிக்கும் இந்த மூடத்தனம், பேரழிவு யுத்தம் முடிந்து ஒரு தசாப்தம் கடந்தும் நிற்கவில்லை. துருப்புக்களைப் பெருக்கித் தள்ளுகின்றன மாறி மாறி வந்த அரசுகள்.

இன்று இராணுவத்தினர் மட்டும் மூன்றே கால் லட்சத்திற்கும் அதிகம் என்கின்றனர் அவதானிகள்.

தவிரவும், பொலிஸாருக்கு மேலதிகமாக விமானப் படை, கடற்படை வேறு. யுத்தம் முடிந்த பின்னர் அங்கும் கூட படைக்குறைப்பு நடக்கவில்லை. படைக் குவிப்பே தொடர்கின்றது.

அரசு ஊழியருக்கு மாத சம்பளம் கொடுப்பதற்கு பணம் இல்லை, பணத்தை – நோட்டை – அச்சிட்டுத் தள்ளுவதுதான் ஒரே மார்க்கம். வேறு வழியில்லை. அப்படி பணத்தை அச்சிட்டு கண்மூடித்தனமாக புழக்கத்தில் விட்டால் நாட்டில் ரூபாவின் பெறுமதி மோசமாக பாதிக்கப்படும் என்பது தெளிவானது. ஆனால் அதை விட வேறு வழி இல்லை என்ற சூழலில் வேறு என்ன செய்வது எனக் கேட்கிறார் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. அப்படி அரசு ஊழியருக்கு சம்பளம் வழங்க முடியவில்லை என்று நாடு துடிக்கிறது.

ஆனால் அநியாயமாக, தேவையின்றி, கணக்கு வழக்கின்றி, ஊதிப் பெருப்பித்து வைத்திருக்கும் தனது முப்படைகளுக்கும் யுத்தத்தின் வெற்றி நாள் என்ற தனது சிங்கள, பௌத்த பேரினவாதத்தின் கொண்டாட் டத்திருவிழாவையொட்டி, பதவி உயர்வை அள்ளித் தந்து, அதன்மூலம் சம்பளம் உட்பட பல செலவினத்தையும் மாதாந்தம் பல நூறு கோடி ரூபா கணக்கில் அதிகரித்து, நாட்டை மேலும் நடுவீதிக்குக் கொண்டு வரும் வேலையை கனகச்சிதமாக ஒப்பேற்றுகின்றது கோட்டா அரசு.

இராணுவத்தில் 396 அதிகாரிகள், 8,110 சிப்பாய்கள், கடற்படையில் 74 அதிகாரிகள் மற்றும் 2,010 சிப்பாய்கள், விமானப்படையில் 450 அதிகாரிகள் 3,361 சிப்பாய்கள் என மொத்தம் 920 அதிகாரிகள் மற்றும் 13 ஆயிரத்து 481 சிப்பாய்கள் என்று 17 ஆயிரத்து 407 படையினருக்குச் சம்பள உயர்வுடன் கூடிய தர உயர்வு இப்போது தாராளமாக வழங்கப்படுகின்றது. இந்தப் பதவி உயர்வுகள் மாதாந்தம் ஏற்படுத்தப் போகின்ற மேலதிக பல நூறு கோடி ரூபா செலவையும் கூட நோட்டுகளை அச்சிட்டுக் கொடுத் துத்தான் நாடு சமாளிக்க வேண்டியிருக்கும். இந்தப் போக்கில் போனால் நாடு திருந்தாது – மீளாது – என்பது நிச்சயம்.

# அமைச்சை நாம் ஏற்றாலும் சிறப்புரிமைகளை ஏற்கோம்!

## ரணிலுக்கு ஹரின், மனுஷ நாணயக்கார கடிதம்



ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்ணான்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றினை அனுப்பியுள்ளனர்.

நெருக்கடியான நிலையில் நாட்டை பொறுப்பேற்று பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு முன்னிலையானமைக்காக ஆதரவு வழங்கவுள்ளோம் என அவர்கள் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய, ஸ்தாபிக்கப்படவுள்ள அனைத்து கட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கத் தாம் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகி சுயாதீனமாக செயற்பட நடவடிக்கை எடுத்தோம் என அவர்கள் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அனைத்து கட்சி அரசாங்கம் அமைக் கப்படும் பட்சத்தில் அமைச்சின் பொறுப்புக் களை உரிய வகையில் நிறைவேற்றவுள் ளதுடன், அமைச்சர்களுக்கு கிடைக்கப்பெறும் சிறப்புரிமைகளை எவையையும் ஏற்கப்போவ தில்லை எனவும் அவற்றை நாட்டைக் கட்டி யெழுப்புவதற்காக ஒதுக்குவதாகவும் அவர் கள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், சிறையில் அடைக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்க போன்ற அப்பாவிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளனர்.

## உலக வங்கியிடமிருந்து நிதியுதவி; பெற்றோல் கொள்வனவும் ஆராய்வு?

உலக வங்கியிடமிருந்து 16கோடி அமெரிக்க டொலர் கடந்த செவ்வாய்க்கிழமை கிடைத்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று (புதன்கிழமை) உரையாற்றிய போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் இந்த எரிபொருள் கொள்வனவுக்காக பயன்படுத்த முடியுமா என ஆராய்வதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

## டெங்கு ஒழிப்பு விசேட வேலைத்திட்டம்

அதிக இடர் மற்றும் அபாய வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள 148 வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

புதன்கிழமை முதல் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை இந்த விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் 19 ஆயிரத்து 908 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கடந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இது இரண்டு மடங்கு அதிகரிப்பு என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் பதிவான டெங்கு நோயா ளர்களில் அதிகமானவர்கள் மேல் மாகா ணத்திலிருந்தே அடையாளம் காணப்பட் டுள்ளனர் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன், காலி, திருகோணமலை, கண்டி, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

## வசீம் தாஜூதீனின் 10 ஆவது ஆண்டு நினைவு ‘கோட்டா கோ கம’வில் செவ்வாய் அனுஷ்டிப்பு



இலங்கை ரக்பி அணியின் முன்னாள் வீரர் வசீம் தாஜுதீனின் 10 ஆவது ஆண்டு நினைவு தினம் செவ்வாய்க்கிழமை கோட்டா கோ கமவில் அனுஷ்டிக்கப்பட்டது.

வசீம் தாஜுதீனின் நினைவாக கொள்ளுப் பிட்டியிலிருந்து காலிமுகத் திடல் வரை பேரணியொன்று நடத்தப்பட்டது.

தாஜுதீனின் குடும்பத்தினர், நண்பர்கள், அவருடன் கல்விகற்ற பாடசாலை மாணவர் கள் உட்பட பலர் இதில் கலந்துகொண்டனர்.

காலிமுகத்திடல் கோட்டாகோகமவில் வசீம் தாஜீதீனின் நினைவாக அஞ்சலி நிகழ்வொன்றும் முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பு காலிமுகத்திடல் பகுதியில் நேற்று 39 ஆவது நாளாக ஜனாதிபதி உள் ளிட்ட அமைச்சரவையை பதவி விலகுமாறு வலியுறுத்தி கோட்டா கோ கம என்ற மக்கள் எழுச்சிப்போராட்டம் இடம்பெற்றுவருகின்றது.

இந்நிலையிலேயே கடந்த 2012 மே 17 ஆம் திகதி நாரஹேன்பிட்டி பார்க் வீதியில் உள்ள சாலிகா மைதானத்துக்கு அருகில் கொல்லப்பட்ட நிலையில் ரக்பி வீரர் வசீம் தாஜுதீன் சடலமாக மீட்கப்பட்டார்.

ஆரம்பத்தில் அவரின் மரணம் வாகன விபத்தால் ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்ட போதிலும் 2015 மே மாதம் அவரின் மரணம் விபத்து அல்ல என நீதிமன்றத்துக்கு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் (சி.ஐ.டி.) அறிவித்தனர். பின்னர் அவரின் சடலம் தோண்டியெடுக்கப்பட்டு மீண்டும் சோதனை நடத்தப்பட்டது. அவர் தாக்குதலால் உயிரிழந் தார் எனவும் கால்கள், நெஞ்சு, கழுத்தில் காயங்கள் ஏற்பட்டிருந்தன எனவும் தெரிவிக்கப்பட்டது.

வசீம்தாஜுதீனின் மரணம் கொலையாகத் தென்படுவதாக நீதிமன்றம் 2016 பெப்ரவரி 25 ஆம் திகதி தெரிவித்ததுடன் இதில் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்யுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நீதி மன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில் ரக்பி வீரர் தாஜுனின் கொலைக்கு நீதி வேண்டி நேற்று கோட்டா கோ கமவில் போராட்டம் முன்னெடுக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 1,000 உக்ரைன் வீரர்கள் சரண்

# ரஷ்யா வசமானது மரியுபோல் நகரம்



உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்துள்ள போர் 3வது மாதமாக தொடர்கிறது. கிழக்கு உக்ரைன் மீது கவனம் செலுத்தி வரும் ரஷ்ய படைகளுக்கு மரியுபோல் நகரம் முக்கியமானதாக கருதப்படுகிறது. இந்நகரை சமீபத்தில் கைப்பற்றினாலும், அங்குள்ள பிரமாண்ட இரும்பாலையை கைப்பற்ற முடியவில்லை. அங்கு பதுங்கி இருந்த 2,000 உக்ரைன் வீரர்கள் ரஷ்ய படைகளிடம் சண்டையிட்டு வந்தனர்.

இந்நிலையில், கடந்த 2 நாள்களாக ஆலையில் உள்ள உக்ரைன் வீரர்கள் ரஷ்யாவிடம் சரணடைந்து வருகின்றனர். கடந்த 24 மணி நேரத்தில் 694 உக்ரைன் வீரர்கள் சரணடைந்தனர் என ரஷ்யா தெரிவித்துள்ளது. இதுவரை 1,000 பேர் சரணடைந்து விட்டனர் எனவும் ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சக செய்தித் தொடர்பாளர் இகோர் கோனசென்கோவ் நேற்று அறிவித்தார். இன்னும் எத்தனை வீரர்கள் ஆலையில் உள்ளார்கள் என்ற சரியான தகவல் இல்லை. ஆனாலும், கிட்டத்தட்ட இந்த ஆலை ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் வந்து விட்டதாகக் கூறப்படுகிறது. எனவே முழு மரியுபோல் நகரமும் ரஷ்யா வசம் வந்துவிட்டது. சரணடைந்த உக்ரைன் வீரர்களை போர் கைதிகளாக மாற்ற ரஷ்யா திட்டமிட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

நேட்டோ அமைப்பில் இணைய விருப்பம் தெரிவித்துள்ள சுவீடன், பின்லாந்து ஆகிய நாடுகள், அதற்கான விண்ணப்பத்தை பூர்த்தி செய்து, பிரஸ்ஸல்சில் உள்ள நேட்டோ தலைமையகத்தில் அமைப்பின் பொதுச் செயலாளரிடம் சமர்ப்பித்துள்ளன.

### வேண்டுமென்றே விமானத்தை கீழே இறக்கியதால் விபத்து

## 133 பேரின் சாவுக்கு விமானியே காரணம் கறுப்பு பெட்டியில் கிடைத்த தகவலில் பகீர்



சீன விமான விபத்தில் 133 பேரின் சாவுக்கு, அந்த விமானத்தின் விமானியே காரணம் என்றும், அவர் வேண்டுமென்றே விமானத்தை கீழே இறக்கி விபத்தை ஏற்படுத்தியதாக பரபரப்பு செய்தி வெளியாகி உள்ளது. சீனாவின் தென்மேற்குப் பகுதியில் இந்த ஆண்டு மார்ச் மாதம் சீன போயிங் விமானம் விபத்துக்குள்ளானது. அதில் பயணம் செய்த 133 பேரும் உயிரிழந்தனர். மீட்கப்பட்ட விமானத்தின் கறுப்பு பெட்டியில் இருந்து கிடைத்த தகவல், அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. விபத்தில் சிக்கிய விமானம், வானில் பறந்து கொண்டிருக்கும் போது மேலே இருந்து வேண்டுமென்றே கீழே விழுந்து விபத்துக்குள்ளானதாக தகவல் வெளியாகி உள்ளது. இதுதொடர்பாக 'வால் ஸ்ட்ரீட் ஜர்னல்' வெளியிட்ட அறிக்கையில், 'கடந்த மார்ச் 21ம் திகதி அன்று குன்மிங்கிலிருந்து குவாங்சோவுக்குச் சென்று கொண்டிருந்த போயிங் 737-800 ஜெட்லைன் விமானம், வானத்தில் இருந்து கீழே விழுந்த விபத்தில் 133 பயணிகள் மற்றும் பணியாளர்கள் பலியாகினர். அந்த விமானத்தின் கறுப்பு பெட்டி மீட்கப்பட்ட விவரத்தை அமெரிக்க அதிகாரிகள் ஆய்வு செய்தனர். அதன்படி விமானம் சுமார் 29 ஆயிரம் அடி உயரத்தில் சென்றுகொண்டிருந்த போது கீழ்நோக்கி 9,075 அடிக்கு வெறும் 2.15 நிமிடங்களில் வந்துள்ளது. இதனை ப்ளைட் ரேடார் 24 என்ற ப்ளைட் டிராக்கர் தெரிவித்துள்ளது. அடுத்த 20 வினாடிகளுக்குள் 3,225 அடி உயரத்தில் விமானம் கீழ் நோக்கி வந்தது. பின்னர் விமானத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது. இந்த விபத்தில் விமானியின் செயல்பாடுகளை ஆய்வு செய்தபோது, அவர் வேண்டுமென்றே விமானத்தை கீழே இறக்கி விபத்துக்குள்ளாக்கியுள்ளார். விமானி அறையில் இருந்த யாரோ ஒருவர் இதற்கான உத்தரவுகளை பிறப்பித்துள்ளார் என்று தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும், 'வால் ஸ்ட்ரீட் ஜர்னல்' வெளியிட்ட அறிக்கை குறித்து சீன விமான நிறுவனம் மற்றும் தேசிய போக்குவரத்து பாதுகாப்பு வாரியம் இன்னும் கருத்து தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆடம்பர பொருள்கள் இறக்குமதிக்கு பாக்கிஸ்தானில் தடை விதிக்கப்பட்டது

நாட்டின் பொருளாதார நிலை குறித்து ஆய்வு செய்ய பிரதமர் பாஸ் ஷெரீப் தலைமையில் நடைபெற்ற சிறப்பு கூட்டத்தில் அத்தியாவசியமற்ற மற்றும் ஆடம்பர பொருள்கள் இறக்குமதிக்கு தடை விதிக்க முடிவு எடுக்கப்பட்டது. பாகிஸ்தான் கடுமையான பொருளாதார நெருக்கடியில் தவித்து வருகிறது. நிதி பற்றாக்குறை, அதிகரித்து வரும் பணவீக்கம், குறைந்து வரும் அந்நிய செலவாணி கையிருப்பு மற்றும் அரசியல் நிச்சயமற்ற தன்மை என பல்வேறு பிரச்சினைகளை அந்தநாடு எதிர்கொண்டு வருகிறது.

இந்த நிலையில் நாட்டின் பொருளாதார நிலை குறித்து ஆய்வு செய்ய பிரதமர் பாஸ் ஷெரீப் தலைமையில் நேற்று சிறப்பு கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தின் முடிவில் அத்தியாவசியமற்ற மற்றும் ஆடம்பர பொருள்கள் இறக்குமதிக்கு தடை விதிக்க முடிவு எடுக்கப்பட்டது.

இதுபற்றி பாஸ் ஷெரீப் கூறுகையில், தேவையற்ற மற்றும் ஆடம்பரப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு விலைமதிப்பற்ற அந்நிய செலாவணி செலவிடப்படாது என கூறினார்.

## கடலில் கழிவு நீரை திறந்து விடுகிறது ஜப்பான்

### புகுஷிமா அணு உலையில்



அணுக் கழிவுகள் அகற்றப்பட்ட கழிவு நீரை கடலில் திறந்து விடும் திட்டத்துக்கு ஜப்பானின் அணுசக்தி ஒழுங்கு முறை ஆணையம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஜப்பானில் கடந்த 2011ஆம் ஆண்டு மார்ச் 11 ஆம் திகதி சுனாமி தாக்கியபோது உலகிலேயே பாதுகாப்பான அணு உலையாகக் கருதப்பட்ட புகுஷிமாவின் டாய்ச்சி அணு உலைக்குள் கடல்நீர் புகுந்தது. இதில் மின்சாரம் உற்பத்தி செய்யும் ஜெனரேட்டர்கள் செயலிழந்து உலைகளை குளிர்விக்க மின்சாரம் இல்லாமல் போனது. இதனால் 6 யூனிட்களில் 3 யூனிட்கள் சேதம் அடைந்தன.

இதனால் சுற்றியுள்ள பகுதிகளில் கதிர்வீச்சு தாக்கியது. 10 ஆண்டுகள் கடந்தும் மக்கள் வசிக்க முடியாத அளவிற்கு கதிர்வீச்சின் தாக்கத்தை இன்னமும் கக்கிக் கொண்டிருக்கிறது அந்த உலை. இதனிடையே புகுஷிமா அணு உலையில் உள்ள அணுக் கழிவுகளை பாதுகாப்பாக அகற்றிவிட்டு அந்த அணு உலையை முழுமையாக செயலிழக்கச் செய்யும் பணிகளில் டெப்கோ என்ற நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

அந்த வகையில் புகுஷிமா அணு உலையில் அணுக் கழிவுகள் நிறைந்த சுமார் 1 லட்சத்து 25 ஆயிரம் தொன் கழிவுநீர் முற்றிலுமாக சுத்திகரிக்கப்பட்டு ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொட்டிகளில் பாதுகாப்பாக சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. அணுக் கழிவுகள் அகற்றப்பட்ட இந்த கழிவு நீரை கடலில் திறந்துவிடும் திட்டத்தை ஜப்பான் அரசு நீண்டகாலமாக பரிசீலித்து வருகிறது.

ஆனால் இந்த திட்டத்துக்கு மீனவர்களும், சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில் அணுக் கழிவுகள் அகற்றப்பட்ட கழிவு நீரை கடலில் திறந்துவிடும் திட்டத்துக்கு ஜப்பானின் அணுசக்தி ஒழுங்கு முறை ஆணையம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

பாதிக்கப்பட்ட ஆலையில் இருந்து சுமார் 1 கி.மீ. தொலைவில் உள்ள பசுபிக் பெருங்கடலில் கடலுக்கு அடியில் ஒரு சுரங்கப்பாதை மூலம் கழிவு நீரை வெளியேற்றுவது அரசின் திட்டம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் தொடங்கப்படலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு Kalaikkathir



# தமிழக முதல்வர் ஸ்டாலினை சந்தித்து நன்றி கூறியது பேரறிவாளன் குடும்பம்



ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக தண்டனை அனுபவித்த பேரறிவாளனை உச்ச நீதிமன்றம் விடுதலை செய்து நேற்று உத்தரவிட்டுள்ளது.இந்தத்தீர்ப்பைபல்வேறுதரப்பினரும்வரவேற்றுள்ளனர்.

ஜோலார்பேட்டையில் உள்ள தனது வீட்டில் இனிப்பு வழங்கி மகிழ்ச்சியை வெளிப்படுத்திய பேரறிவாளன், தனது விடுதலைக்காக போராடிய அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். மேலும், தனது விடுதலைக்காக போராடிய அனைவரையும் வாய்ப்பு கிடைக்கும்போது நேரில் சந்தித்து நன்றி தெரிவிக்க உள்ளேன் எனவும் அவர் கூறினார்.

அதன்படி, நேற்று மாலை சென்னை வந்த பேரறிவாளன் குடும்பத்தினர், சென்னை விமான நிலையத்தில் தமிழக முதல்வர் ஸ்டாலி னைச் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

## பேரறிவாளன் விடுதலை செய்யப்பட்டமை சரியே கேரள முன்னாள் ஆளுநர் சதாசிவம் கருத்து



ராஜீவ்காந்தி கொலை வழக்கில் பேரறிவாளனை சுப்ரீம் கோர்ட் நேற்று விடுதலை செய்தமை 142 ஆவது சட்டப் பிரிவின்படி தீர்ப்பளித்தது சரியே, என்று ஈரோடு மாவட்டம் நெரிஞ்சிப்பேட்டையில் வசிக்கும் ஓய்வுபெற்ற சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதியும், கேரள முன்னாள் ஆளுநருமான பி.சதாசிவம் கருத்து தெரிவித்துள்ளார்.

பேரறிவாளனது விடுதலைக்கு காங்கிரஸ் கட்சியினரும், இன்னும் சில தரப்பினரும் கடும் எதிர்ப்புகளை வெளியிட்டு வரும் நிலையில், ஓய்வுபெற்ற நீதிபதியின் இந்தக் கருத்து முக்கியத்துவம் பெறுவதாக அமைந்துள்ளது.

மரண தண்டனைக் கைதிகளான பேரறிவாளன் உட்பட ஆறு பேரின் கருணை மனுக்களை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்திருந்தார்கள். அதனை உடனே பரிசீலித்து முடிவு எடுத்திருக்க வேண்டும். அப்போது இருந்த உள்துறை அமைச்சர் மூலம்கருணைமனுதாரர்களின் கருத்துக்களை அந்த கோப்பில் பதிவு செய்து அதனை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்க வேண்டும். ஆனால் கருணை மனுதாரர்களின் மனுவானது மத்திய அரசின் உள்துறை அமைச்சரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டு கிட்டத்தட்ட 11 வருடங்களுக்குப் பின்பு நிராகரிக்கப்பட்டது.

அதை எதிர்த்து தான் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து இருந்தார்கள்.

அப்போது இந்த வழக்கில் வாதாடிய வழக்கறிஞர்கள் பேரறிவாளன் உட்பட 6 பேர் தூக்கு தண்டனை கைதிகளாக இருந்தாலும் கூட இந்திய அரசியலமைப்புச் சட்டம் 21 இன் படி அவர்களுக்கு பாதுகாப்பு உள்ளது. நாங்கள் அனுப்பிய கருணை மனுக்களை இவ்வளவு நாள்கள் காலம் தாழ்த்தி முடிவெடுத்தது தவறான செயல். இதனை மேற்கோள்காட்டி வாதிட்டு இருந்தனர்.

காலதாமதத்திற்கு அப்போது இருந்த மத்திய அரசின் விளக்கம் தகுந்த காரணமாக இல்லாததால் எங்களது அமர்விற்கு வந்த பின்பு மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்து உத்தரவிட்டோம்.

அந்த வழக்கில் இறுதியாக நாங்கள் என்ன சொன்னோம் என்றால், கைதிகள் பல வருடங்கள் சிறைத் தண்டனையை அனுபவித்திருந்ததால், மத்திய, மாநில அரசுகள் விருப்பப்பட்டால் அரசின் கொள்கைகளை ஆராய்ந்து சட்டப்படி அவர்களை விடுதலை செய்யலாம், என தெளிவாகக் கூறிவிட்டோம்.

ஆனால், எந்த அரசு என்பது அவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும் என்று அதிலேயே கூறியுள்ளோம். அந்தத் தீர்ப்பின் அடிப்படையில்தான் நமது மாநில அரசு, அமைச்சரவை மூலம் விடுதலை செய்வதற்காக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ளனர். அதனடிப்படையில் கடந்த ஒரு வார காலமாக உச்சநீதிமன்றத்தில் பரபரப்பாக நடந்து வந்த இந்த வழக்கில் உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் விடுதலை அளித்து தீர்ப்பளித்துள்ளனர். எனவே 142 ஆவது சட்டப் பிரிவின்படி அவர்கள் தீர்ப்பளித்தது சரியே, என்று ஓய்வு பெற்ற சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதியும், கேரள முன்னாள் ஆளுநருமான பி.சதாசிவம் கூறியுள்ளார்.

## பேரறிவாளன் விடுதலை ஜெயலலிதாவின் தொலைநோக்குக்கு கிடைத்த மகத்தான வெற்றியென அ.தி.மு.கவினர் அறிக்கை



ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 30 ஆண்டுகளுக்கும் மேலாகதண்டனைஅனுபவித்த பேரறிவாளனை உச்ச நீதிமன்றம் விடுதலை செய்து உத்தரவிட்டுள்ளமை தொடர்பாக அ.தி.மு.க. சார்பில் எடப்பாடி பழனிசாமி மற்றும் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

30 ஆண்டு காலமாக சிறையில் இருந்த பேரறிவாளனை உச்சநீதிமன்றம் விடுதலை செய்திருப்பது அ.தி.மு.கவிற்கு மிகுந்த மகிழ்ச்சியையும், மனநிறைவையும், நிம்மதியையும் தருகிறது.

பேரறிவாளன் மற்றும் ஆறு பேருக்கும் நீதி வழங்க வேண்டும் என்பதற்காக ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள், எடுத்து வைத்த சட்ட நுணுக்கங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட மற்ற 6 பேரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதை புரட்சித் தலைவி அம்மா அவர்களும், அவரைத் தொடர்ந்து 2018 ஆம் ஆண்டில் அவர்களின் வழிநடந்த கழக அரசும் துணிச்சலாக அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. அ.தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு தான் இன்றைய உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்கு அடித்தளமாகும்.

பேரறிவாளன் விடுதலை ஜெயலலிதாவின் துணிச்சலுக்கும் தொலைநோக்கு சிந்தனைக்கும் சட்ட ஞானத்திற்கும் கிடைத்த மகத்தான வெற்றி. எஞ்சிய 6 பேரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று அ.தி.மு.க. சார்பில் கேட்டுக்கொள்கிறோம், என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## விலைவாசி உயர்வு குறித்து மத்திய அரசு மீது பிரியங்கா காந்தி டுவிட்டரில் கடும் விமர்சனம்



நாட்டில் விலைவாசி கடுமையாக உயர்ந்து இருப்பதாக இந்திய மத்திய அரசை கடுமையாக விமர்சித்துள்ள காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான பிரியங்கா காந்தி , மக்கள் தங்கள் அன்றாட செலவுகளை ஈடு செய்ய கடன் வாங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படலாம் என்றும் மத்திய அரசைச் சாடியுள்ளார்.

இது தொடர்பாக பிரியங்கா காந்தி வெளியிட்டுள்ள டுவிட் பதிவில், பா.ஜ.க. அரசின் ஒரே ஒரு பொருளாதாரக் கொள்கை கூட நடுத்தவர்க்கம், ஏழை எளிய மக்களின் வருமானத்தை உயர்த்தும் நோக்கத்திலும் அவர்களின் செலவினங்களை குறைக்கும் வகையிலும் இல்லை. தங்களின் அன்றாடச் செலவுகளுக்குக் கூட கடன் வாங்க வேண்டியிருக்குமோ? எனநடுத்தர மற்றும் ஏழை மக்கள் அச்சப்படுகின்றனர், என்று தெரிவித்துள்ளார்.

தனது பதிவோடு பெற்றோல், டீசல் விலை உயர்வு தொடர்பாக வெளியிடப்பட்ட ஊடகச்செய்தி ஒன்றையும் இணைத்து அவர் பதிவிட்டுள்ளார்.

## பங்களாதேஷ் - இந்தியா இடையே மீண்டும் ரயில் சேவை மே 29இல்



இந்தியா மற்றும் பங்களாதேஷ் நாடுகளுக்கு இடையே பயணிகள் ரயில் சேவை மே 29 முதல் மீண்டும் தொடங்கும் என்று அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகியுள்ளது.

கொரோனா பரவல் காரணமாக கொல்கத்தா மற்றும் பங்காள தேசத்தில் உள்ள நகரங்களுக்கு இடையேயான ரயில் சேவைகள் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் நிறுத்தப்பட்டன. இந்த சேவை நீண்ட காலமாக நிறுத்தப்பட்டு இருந்த நிலையில், தற்போது கொரோனா தொற்று பரவல் இந்தியா, பங்களாதேஷ் இரு நாடுகளிலும் குறைந்துள்ளதால் மீண்டும் இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான ரயில் சேவை தொடங்கப்படவுள்ளதாகவும், மே 29, 2022 அன்று மீண்டும் ஆரம்பமாகவுள்ளது என ரயில் துறை அறிவித்துள்ளது.

# ஆஸிக்கு சட்டவிரோதமாகப் புறப்படவிருந்தனராம் 21 பேர் மட்டு. புதுக்குடியிருப்புக் கரையில் கைது!

## இரு படகுகளும் சிக்கின; அதிரடிப் படை நடவடிக்கை







மட்டக்களப்பு - புதுக்குடியிருப்பு கடற்கரையில் இருந்து ஆஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதமாக படகு மூலம் செல்ல முற்பட்ட 21 பேர் கைது செய்யப்பட் டுள்ளனர்.

இவர்கள், மட்டு. புதுக்குடியிருப்புக் கடற்கரையில் வைத்து இன்று அதிகாலை விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன்2படகுகளும்கைப்பற்றப்பட்டுள்ளன எனக் காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படை புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து, இன்று 2 மணியளவில் விசேட அதிரடிப்படையினர் புதுக்குடியிருப்புக் கடற்கரையில் சுற்றி வளைத்து சோதனைநடவடிக்கையை மேற்கொண்டனர். இதன் போது இரு படகுகளில் ஆஸ்திரோலியாவுக்கு சட்டவிரோதமாக செல்வதற்கு தயாராகிய நிலையில் பெண்கள் உட்பட 21பேரை கைது செய்தமையுடன் இரு படகுகளையும் கைப்பற்றினர்.

இதில் கைது செய்யப்பட்டவர்கள் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும், களுவாஞ்சிக்குடியை சேர்ந்த இதன் பிரதான சூத்திரதாரி தலைமறைவாகி உள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களை, நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் காத்தான்குடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சமுர்த்தி அலுவலருக்கு எதிராக ஆர்ப்பாட்டம்





(ஹஸ்பர்)

திருகோணமலை பட்டினமும் சூழலும்பிரதேசசெயலகத்துக்குட்பட்ட ஜின்னா நகர் பகுதியில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று இடம் பெற்றது.

சம்பந்தப்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்சமுர்த்திமுத்திரைபெற்றுக் கொடுத்தல் உட்பட பல விடயங்களை முன்வைத்து இலஞ்சம் கேட்கிறார் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.

சமுர்த்தி முத்திரை பெறுவதே அன்றாட ஜீவனோபாயத்துக்கு போதாமை உள்ளதாலே. இது மக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படுகிறது. இதனை முறைகேடாக பயன்படுத்தும் சமுர்த்தி அதிகாரியை உடன் இடம் மாற்றம் செய்து நேர்மையான அதிகாரியை பெற்றுத் தாருங்கள் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

# ஏறாவூரில் பெண்களுக்கென பிரத்தியேக நூலகம் திறப்பு

ஏறாவூர் நகர சபையின் ஏற்பாட்டில், பெண்களுக்கென பிரத்தியேக நூலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக நகர சபைத் தவிசாளர் எம்.எஸ். நழிம் தெரிவித்தார்.

ஏறாவூரில்தான் பெண்களுக்கென இலங்கையிலேயே தனியான பொதுச் சந்தையும் உள்ளது. அதேபோல், பெண்களுக்கென தனியாக உடற்பயிற்சி ஏற்பாடுகளும் ஏறாவூர் வாவிக் கரையோரத்தில் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாத்திமா மகளிர் நூலகம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வாசிகசாலைத் திறப்பு விழா, ஏறாவூர் வாவிக் கரையோரத்தில் அமைந்துள்ள கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் நகர சபைத் தவிசாளர் தலைமையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஏறாவூரின் பெண் ஆளுமைகளான பிரதேச செயலாளர் நிஹாறா, ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி ஷாபிறா, பிரதேச செயலக திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் சிஹானா, தென்னைப் பயிர்ச்செய்கை ஆய்வு கூடப் பொறுப்பாளர் ஜாஹிறா, நகர சபை உறுப்பினர் சுலைஹா மற்றும் ஏறாவூர் நகர சபைச் செயலாளர் எம்.எச்.எம். ஹமீம், நகர சபை பிரதித் தவிசாளர் ஏ.எஸ்.எம். றியாழ் உட்பட இன்னும் பல அதிதிகள் கலந்துகொண்டனர்.






காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இனவாதத்துக்கோ தீவிரவாதத்துக்கோ அமைதியான தாய்நாட்டில் இடமில்லை!

## ஜனாதிபதி கோட்டா திட்டவட்டம்

தாய் நாட்டின் சுதந்திரத்தையும், நாட்டின்ஒருமைப்பாட்டையும்பாதுகாத்த, வீரமிக்க படைவீரர்களை நாம் என்றும் மறக்க மாட்டோம். அவர்களின் தியாகத்தின்உயிர்ச்சக்தியைநாங்கள்எப்போதும் மதிக்கிறோம்என்பதேஅதற்குக்காரணம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

மே 19 தேசிய படைவீரர்கள் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு

இந்த ஆண்டும் தேசிய நோக்கத்துக்காகப் படைவீரர்கள் ஆற்றிய மகத்தான தியாகங்களை நினைவுகூர்ந்து தேசிய படைவீரர் தினத்தைக் கொண்டாடுகிறோம்.

இன்று நாம் எதிர்நோக்கும் நெருக்கடியான நிலை நம்மில் எவரும் எதிர்பார்த்தது அல்ல. பொருளாதார நெருக்கடி, அரசியல் மற்றும் சமூக சிக்கலான நிலை வரை வியாபித்தது.

எவ்வாறாயினும், இந்த நாட்டின் இறையாண்மை மற்றும் சுதந்திரத்துக்கான கொள்கையை நாங்கள் குறைத்து மதிப்பிட மாட்டோம். ஏனென்றால் எல்லாவற்றுக்கும் மேலாக தாய் நாட்டைக் காக்க வேண்டும் என்ற அபிலாஷை இருப்பதால் ஆகும்.

மனிதாபிமான நடவடிக்கைகளின் மூலம் யுத்தத்தின் சாபத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, நாட்டில் அமைதியை ஏற்படுத்தியவர்கள் எமது வீர வீராங்கனைகள். வெறுப்பும், கோபமும், பழி வாங்கலும் அதில் இருக்கவில்லை.

எனவே, அமைதியான தாய் நாட்டில் இனவாதத்துக்கோ வேறு எந்த தீவிர வாதத்துக்கோ இடமில்லை. இலங்கை சமூகத்தில் ஒரு தனித்துவமான பெறுமதியாக நாங்கள் இதனைக் கருதுகிறோம்.

வரலாற்றில் பல சவாலான கால கட்டங்களையும் சந்தர்ப்பங்களையும் நாம் கடந்து வந்திருக்கிறோம். அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசாபிமானிகள் எப்போதும் முன்னிலை வகித்தனர் என்பதை மறந்துவிடக் கூடாது. இந்தக் குழு நாட்டின் ஒட்டுமொத்த படை வீரரையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

எனவே, தற்போதைய சவாலை இன்னும் உன்னிப்பாகப் பார்க்கும் பொறுப்பை வரலாறு உங்களுக்கு வழங்கியுள்ளது என்பதை நினைவில் கொள்வது அவசியம்.

பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டு குழுக்களும் தனிநபர்களும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியை ஒரு காரணமாகப் பயன்படுத்தி, தேசிய பாதுகாப்பில் அழுத்தங்களைப் பிரயோகிக்க முயற்சிக்கின்றனர் என்பதில் சந்தேகமில்லை. நாம் அதனை ஒன்றுபட்டு முறியடிக்க வேண்டும். அப்போதுதான் துணிச்சலான போர் வீரனின் நாட்டுக்கான அர்ப்பணிப்பு பாதுகாக்கப்படும்.

தேசிய படைவீரர் தினத்தை முன்னிட்டு, சுதந்திர நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த மற்றும் அங்கவீனமடைந்த வீர வீராங்கனைகளுக்கு எனது கௌரவமான மரியாதையை செலுத்துகிறேன் என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புதிய சிந்தனைகளால் மனித மாண்பை வெளிப்படுத்தும்திறன் சிறுவர்களுக்குண்டு!

## கரித்தாஸ் கியூடெக் இயக்குநர் தெரிவிப்பு

கியூடெக் கரித்தாஸ் ஒருங்கிணைந்த சமூக மேம்பாட்டு சிறுவர் கழகங்களுக்கான ஓவியப்போட்டி கியூடெக் கரித்தாஸ் மண்டபத்தில் இயக்குநர் அருட்பணி ச.இயூஜின் பிரான்ஸிஸ் தலைமையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இப்போட்டியில் ஆனைக்கோட்டை, புதிய சோனகத்தெரு, கொழும்புத்துறை மணியந்தோட்டம், உதயபுர சிறுவர் கழகங்களில் இருந்து 60 மாணவர்கள் பங்கேற்றனர்.

மனித மாண்பை மதிப்போம் எனும் கருப்பொருளில் நடைபெற்ற ஓவியப்போட்டி மூன்று பிரிவுகளாக நடைபெற்றது. இயக்குநர் உரையாற்றுகையில் பாடசாலை மாணவர்கள் மனங்களில் மனித மாண்பை மதிக்கும் பண்பை சிறுவர் மனங்களில் புதிய சிந்தனைகளில் வெளிப்படுத்தவும், சகல பிரதேச, சமய மாணவர்களுடன்நல்லுறவைமேம்படுத்தவும், மகிழ்வான சூழலில் மனநிறைவான மகிழ்வூட்டல் குழு விளையாட்டுக்கள் மூலம் ஆற்றல் திறன்களை வெளிப்படுத்த கிடைக்கும் சந்தர்ப்பங்களை நன்கு பயன்படுத்தும் சிறுவர்களே வாழ்வின் வெற்றியாளர்கள் ஆகின்றனர் எனத் தெரிவித்தார்.

# ஊவா மாகாண ஆளுநர் முஸம்மிலின் புதல்வி இங்கிலாந்து உள்ளூராட்சி தேர்தலில் வெற்றி!



இங்கிலாந்தில் நடைபெற்ற டொட்டஹன் வட்டாரத்துக்கான உள்ளூராட்சித் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சியின் ஊடாக போட்டியிட்ட ஊவா மாகாண சபை ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மிலின் புதல்வி ஸ்னா முஸம்மில் வெற்றிபெற்றுள்ளார்.

அந்தப் பிரதேசத்தில் இலங்கை வாக்காளர்கள் இல்லாதபோதிலும் இந் நகரைத் தெரிவு செய்து, அப்பிரதேசத்தில் தனது பிரசார சமூக சேவைகளைச்செய்து அங்குவாழும் வெளிநாட்டவர்கள் மனதை அவர் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மே மாதம் 5 ஆம் திகதி குறித்த தேர்தலுக்கான வாக்கெடுப்பு நடைபெற்றது.

இங்கிலாந்தில் உள்ள திறந்த பல்கலைக்கழகத்தில் அபிவிருத்தி முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணி மற்றும் கார்டிப் பெருநகரம் பல்கலைக்கழகத்தில் முதுநிர்வாகமாணி ஆகிய பட்டப்படிப்புகளை நிறைவு செய்துள்ள ஸ்னா முஸம்மில், சமூக சேவை அமைப்புக்களில் தொண்டராக பல்வேறு அமைப்புக்களில் உறுப்பினராக இருந்து வயது முதியவர்களுக்கு உதவுதல், கெயினாஷ் இளைஞர் அமைப்பு ஊடாக சிறுவர்கள் சிறையில் உள்ள பெற் றோர்கள் அவர்களது குழந்தைகள் பராமரிப்பு போன்ற சமூக சேவைகளைச் செய்து வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# யுத்த வெற்றி தினத்தை முன்னிட்டு இராணுவ வீரர்களுக்கு பதவி உயர்வு

யுத்த வெற்றி தினத்தை (மே 18) முன்னிட்டு அடுத்த நிலைக்கு தகுதியுடைய 396 அதிகாரிகள் மற்றும் 8 ஆயிரத்து 110 சிப்பாய்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

முப்படைகளின் தளபதியும் ஜனாதிபதியுமான கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் பாதுகாப்புப் பதவி நிலை பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவால் இவ்வாறு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

நேற்று (புதன்கிழமை) முதல் அமுலுக்கு வரும் வகையில் இவ்வாறு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை கடற்படையின் 74 அதிகாரிகள் மற்றும் 2 ஆயிரத்து 10 சிப்பாய்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

அத்துடன் இலங்கை வான் படையின் 450 அதிகாரிகள் மற்றும் 3,361 சிப்பாய்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# கடற்றொழிலுக்குச் சென்றவர் யாழ்ப்பாணத்தில் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை பகுதியில் இருந்து கடற்தொழிலுக்கு சென்றவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொழும்புத்துறை, உதயபுரம் பகுதியை சேர்ந்த அந்தோனிப்பிள்ளை டென்சில் ராஜேந்திரன் (வயது 53) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த நபர் கடந்த திங்கட்கிழமை அதனது மகனுடன் தொழிலுக்கு சென்ற வேளை கடலில் தவறி விழுந்த நிலையில் காணாமல் போன நிலையில் மீனவர்கள் தேடிவந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை நெடுந்தீவு கடற்பரப்பில் கரையொதுங்கிய நிலையில் சடலம் மீட்கப்பட்டது.

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# தமிழினப்படுகொலைக்கு நீதிகோரிய ஊர்தியை பின்தொடர்ந்து அச்சுறுத்தல்!





தமிழினப்படுகொலைக்கு நீதிகோரிய ஊர்தி புதுக்குடியிருப்பு நகரை நேற்று மதியம் சென்றடைந்தது. இதன்போது அந்த ஊர்தியை சீருடை அணிந்தவர்களின் வாகனம் பின்தொடர்ந்து சென்றதோடு ஓட்டோ ஒன்றிலும் மோட்டார் சைக்கிள்களிலும் பின்தொடர்ந்த சிலர் அச்சுறுத்தும் வகையில் படம் எடுத்தும் தொடர்ச்சியாக பின் தொடர்ந்தும் சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.05.2022இல் வெளியிடப்பெற்றது.